ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

බැංකු නොවන මූල්‍ය ආයතන අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
DEPARTMENT OF SUPERVISION OF NON-BANK FINANCIAL INSTITUTIONS

අංක 30, ජනාධිපති මාවත, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01, இலங்கை
No. 30, Janadhipathi Mawatha, Colombo 01, Sri Lanka

தொடர்பு: 24/06/002/0002/002

2022 ஏப்பிறல் 18

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

கனம் ஐயா/அம்மணி

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2022.04.12 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பின்வருவனவற்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றது.

1. வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள் தொடர்பில் 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையை இரத்துச்செய்து 2022.03.31 அன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கடிதத்தை புறக்கீடுசெய்தல்,

2. ‘ஏற்புடைய துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் விளைவு வீதம்’ மீதான வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீதான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் 2ஆம் பிரிவை இரத்துச் செய்தல், மற்றும்

3. (அ) நடைமுறையிலுள்ள துணைநில் வைப்பு வசதி வீதம், மற்றும்

   (ஆ) கீழே அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2[1]இல் தரப்பட்டவாறு இறுதி நான்கு முதலாந்தர ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் அசைவு சராசரி.

ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை தீர்மானிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை அனுமதித்தல்.
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் திறைசேரி உண்டியல்கள் ஏலத்தின் தொடர்ந்துவரும் நாளிலுள்ள வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அவற்றின் தற்றுணிபில் திருத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

[1] எதிர்காலத்தில் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பதற்கான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான வழிகாட்டலொன்றாக 2022.04.18 அன்றுள்ளவாறு ஏற்புடைய வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் இக்கடிதத்திற்கான இணைப்பு Iஇல் தரப்பட்டுள்ளன.

☎ 011-2477500 011-2477738/697 dsnbfi@cbsl.lk www.cbsl.gov.lk

**அட்டவணை 01: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான வைப்புக்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| வைப்புக் காலம் | ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம் |
|---|---|
| சேமிப்புக்கள் அத்துடன் ஒரு மாதத்திற்கும் குறைவான காலப்பகுதியுடைய அல்லது முதிர்ச்சி குறித்துரைக்கப்படாத ஏனைய வைப்புக்கள் | நடைமுறையிலுள்ள துணைநில் வைப்பு வசதி வீதம் |
| **கால வைப்புக்கள்** | |
| 01 மாதம் மற்றும் 03 மாதங்களை விடவும் குறைவு | 91 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் |
| 03 மாதங்கள் மற்றும் 06 மாதங்களை விடவும் குறைவு | 182 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.25% |
| 06 மாதங்கள் மற்றும் 01 ஆண்டை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.00% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.75% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.25% |
| 05 ஆண்டுகள் | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 4.25% |

**அட்டவணை 02: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் படுகடன் சாதனங்களுக்கான முதர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| படுகடன் சாதனங்களின் காலம் | ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம் |
|---|---|
| 01 ஆண்டை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.75% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.25% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.75% |
| 05 ஆண்டுகள் | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 4.75% |

எனினும், முறையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் உரிய விழிப்புடன் இருக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையின் 1.1(i)ஆம் பிரிவு 1.1(ii)ஆம் பிரிவு மற்றும் 1.2ஆம் பிரிவு இத்துடன் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,

(திருமதி.) ஆர் எம் சி எச் கே ஜயசிங்க
**பணிப்பாளர்**

*இணை*: இணைப்பு I

இணைப்பு 1

**இறுதி நான்கு திறைசேரி உண்டியல்கள் முதலாந்தர ஏலங்களை அடிப்படையாகக்கொண்டு 2022.04.18 உள்ளவாறான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பிடுதல்**

**அட்டவணை 1: அசையும் சராசரி நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தை கணிப்பிடுதல்**

| இறுதி நான்கு திறைசேரி உண்டியல்கள் முதலாந்தர ஏலங்கள் | 22-ஏப்பி-11 | 22-ஏப்பி-06 | 22-மாச்-30 | 22-மாச்-23 | அசையும் சராசரி நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் |
|---|---|---|---|---|---|
| 91 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் | 19.71 | 14.12 | 12.92 | 12.10 | **14.71** |
| **182** நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் | 22.73 | 15.36 | 12.25 | 11.98 | **15.58** |
| 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் | 23.36 | 15.69 | 12.28 | 12.00 | **15.83** |

**அட்டவணை 2: கால வைப்புக்கள் தொடர்பில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பிடுதல்**

| கால வைப்புக்களின் காலம் | ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம் | தற்போதுள்ள ஏற்புடைய உயர்ந்தபட்ச வட்டி வீதம் (%) |
|---|---|---|
| 01 மாதம் மற்றும் 03 மாதங்களை விடவும் குறைவு | 91 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் | 14.71 |
| 03 மாதங்கள் மற்றும் 06 மாதங்களை விடவும் குறைவு | 182 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.25% | 15.58 + 0.25 = 15.83 |
| 06 மாதங்கள் மற்றும் 01ஆண்டை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 0.50% | 15.83 + 0.50 = 16.33 |
| 01ஆண்டு மற்றும் 02ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.00% | 15.83 + 2.00 = 17.83 |
| 02ஆண்டுகள் மற்றும் 03ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 2.75% | 15.83 + 2.75 = 18.58 |
| 03ஆண்டுகள் மற்றும் 05ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 3.25% | 15.83 + 3.25 = 19.08 |
| 05ஆண்டுகள் | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் + 4.25% | 15.83 + 4.25 = 20.08 |

**அட்டவணை 3: படுகடன் சாதனங்கள மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை கணிப்பிடுதல்**

| **கால வைப்புக்களின் காலம்** | **ஆண்டுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்** | **தற்போதுள்ள ஏற்புடைய உயர்ந்தபட்ச வட்டி வீதம் (%)** |
|---|---|---|
| 01ஆண்டை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்+ 0.50% | 15.83 + 0.50 = 16.33 |
| 01ஆண்டு மற்றும் 02ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்+ 2.75 % | 15.83 + 2.75 = 18.58 |
| 02ஆண்டுகள் மற்றும் 03ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்+ 3.25 % | 15.83 + 3.25 = 19.08 |
| 03ஆண்டுகள் மற்றும் 05ஆண்டுகளை விடவும் குறைவு | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்+ 3.75 % | 15.83 + 3.75 = 19.58 |
| 05ஆண்டுகள் | 364 நாட்கள் திறைசேரி உண்டியல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்+ 4.75 % | 15.83 + 4.75 = 20.58 |